மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **16.1.2012**

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் போக்குவரத்து காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. B.வேல்முருகன் அவர்கள் **12.1.2012** அன்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது சாலை விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், திருவேங்கடம் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.செந்தில்குமார் அவர்கள் **13.1.2012** அன்று பணியில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. N. தேவராஜன் அவர்கள் **14.1.2012** அன்று இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது முத்தனூர் காடு அருகே சாலை விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்**;**

விழுப்புரம் மாவட்டம், பகண்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு.K.சேகர் அவர்கள் **15.1.2012** அன்று பணியில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவலர்கள் திரு.வேல்முருகன், திரு.செந்தில்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. தேவராஜன் மற்றும் திரு. சேகர் ஆகியோர் பணியில் இருக்கும் போது காலமானார்கள் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. பணியில் இருக்கும் போது காலமான இரண்டாம் நிலைக் காவலர் திரு. வேல்முருகன், காவலர் திரு. செந்தில்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. தேவராஜன் மற்றும் திரு. சேகர் ஆகியோர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவங்களில் காலமான திரு.வேல்முருகன் திரு. செந்தில்குமார், திரு. தேவராஜன் மற்றும் திரு. சேகர் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**